| | | | |
|---|---|---|---|
| Headline | Najib urges public to spread greater awareness about dangers of AIDS | | |
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 03 Dec 2014 | Color | Black/white |
| Section | News | Circulation | 28,000 |
| Page No | 2 | Readership | 180,000 |
| Language | Tamil | ArticleSize | 76 cm² |
| Journalist | NULL | AdValue | RM 222 |
| Frequency | Daily | PR Value | RM 665 |



# எய்ட்ஸ் விழிப்புணர்வுத் தகவல்கள் மக்களிடையே அதிகரிக்க வேண்டும்

கோலாலம்பூர் , டிச. 3–

எய்ட்ஸ் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த, அந்நோயின் விபரீதம் குறித்து அதிகமான தகவல்கள் பரப்பப்பட வேண்டும் என்று பிரதமர் டத்தோஸ்ரீ நஜிப் துன் ரசாக் வலியுறுத்தினார்.

இந்த நோய் பற்றிய புரிந்துணர்வும் விழிப்புணர்வும் மலேசியர்களிடையே அதிகமாகத் தேவை என்று அவர் குறிப்பிட்டார். எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோயின் அபாயத்திலிருந்து விடுபட்ட ஓர் உலகம் தோற்றுவிக்கப்படுவதற்கு ஏராளமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

தமது முகநூலின் வாயிலாக நேற்று முன்தினம் அவர் இந்தக் கருத்துகளைப் பதிவு செய்தார். 'பூஜ்ஜிய நிலைக்கே திரும்புவோம்' என்ற உலக எய்ட்ஸ் தினக் கருப்பொருள் அறிவிக்கப்பட்டு, இவ்வாண்டோடு நான்கு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன.

எச்.ஐ.வி.யைக் கட்டுப்படுத்துவதில் மிகப்பெரும் சவால்கள் எதிர்கொள்ளப்பட்டிருக்கும். அதனை எதிர்கொண்டு முறியடிப்பதில் பல பின்னடைவுகளும் பாரபட்சங்களும் முட்டுக்கட்டையாக விளங்குகின்றன என்று அறிவிக்கப்படுவதையும் அந்தச் செய்தியில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

Powered by: iSENTIA